[1972 டிசம்பர் 4

பால் பவுடர் உற்பத்தி

* 39. வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் பால் பவுடர் உற்பத்தி செய்யும் திட்டம் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. **கண்ணப்பன்** : (அ) இல்லே.

(இ) இவ்வினு எழவில்லே.

திரு. சு. துரைசாமி : நம்முடைய குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட ஊட்டச்சத்து குறைவாக இருப்பதன் காரணமாக அவர்களது அறிவு வளர்ச்சி, உடல் வளர்ச்சி இவை பாதிக்கப்படுகின்றன. ஆகவே அதைப் போக்கு வதற்கு மாவட்டந்தோறும் பால் பவுடர் உற்பத்தி செய்யும் பண்ணே ஆரம்பிப் பதின் மூலமாகவும் அங்குள்ள ஏழைக் குழந்தைகளுக்கு ஆரம்பப் பள்ளிகளில் பால் வழங்குவதன் மூலமாகவும் அறிவு வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். ஆகவே அந்த நோக்கத்தோடாவது மாவட்டந்தோறும் ஒவ்வொரு பால் பவுடர் உற்பத்தி செய்யும் பண்ணேயை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. **கண்ணப்பன்** : குழந்தைகளிடையே அறிவு வளர்ச்சி ஏற்படுவதற்கு பால் பவுடர்தான் வேண்டுமென்ற நிலேயில்லே. பாலே நாம் தாராளமாக வழங்கலாம். அந்த அடிப்படையில்தான் தமிழ்நாடு முழுவதும் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளே எடுத்து வருகிறேம். இருந்தாலும் பால் அதிகமாக வரும் நாட்களில் அந்தப் பால் கெட்டுவிடாமல் பாதுகாக்கவும் நிரந்தரமாக பால் விநியோகத்தை தமிழ்நாடு முழுவதும் செய்வதற்கும் மதுரையில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலேயை அமைக்க வேண்டுமென்று அரசு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளே பால் துறையினர் எடுத்துவருகிருர்கள்.

திரு. எம். தேவராசன் : தலேவரவர்களே, உதகையில் பால் பண்ணே ஆரம் பிக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது. இப்போது கூட உதகையிலிருந்து சென்னேக்கு பால் வந்துகொண்டிருக்கிறது. அதை விரிவாக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. **கண்ணப்பன்** : தலேவரவர்களே, உதகையில் மட்டு மல்லாமல் தமிழ்நாடு பூராவிலும் எங்கெங்கே பால் பண்ணேகளே புதிதாக ஆரம் பிக்கலாம், ஏற்கெனவே இருக்கும் பண்ணேகளே சற்று விரிவுபடுத்தலாம் என்ப தற்காக துரிதமாக நடவடிக்கைகளே மேற்கொள்ளும் வகையில் பால் துறை

1972 டிசம்பர் 4]

மேம்பாட்டுக் கழகம் அமைத்திருக்கிறோம். அவர்கள் அதுபற்றி பரிசீலித்து வருகிறார்கள்.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கால் நடைக்கு பேர் போன இடம் கோவை மாவட்டத்திலுள்ள எனது காங்கேயம் தொகுதியாகும். நிலச்சீர்திருத்தச் சட்டத்தினால் இப்போது என்னுடைய தொகுதியில் சுமார் 3,500 ஏக்கர் நிலம் அரசாங்கத்திற்கு வர இருக்கிறது. அதிலே 1,500 ஏக்கர் நிலத்தை ஏழைகளுக்குக் கொடுத்து விட்டு, மீதியிருக்கும் 2,000 ஏக்கர் நிலத்தில் ஒரு அரசாங்கப் பால் பண்ணையை ஆரம்பித்தால் காங்கேயம் மாடுகள் அழியாமல் இருப்பதற்கும், பால் உற்பத்தியைப் பெருக்கு வதற்கும் வசதியாக இருக்கும். இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பால் உற்பத்தி செய்வ தற்கு எந்தெந்த வகைகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதை அரசு பரிசீலித்து வருகிறது. அதிலே இதுவும் சிறந்ததாக இருந்தால், இதையும் யோசனை செய்யலாம்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : துணைத் தலைவரவர்களே, வேலூருக்கு அருகாமை யில் இருக்கும் பால் சேகரிக்கும் நிலையத்திலுள்ள 'ஃப்ரீசிங் பிளாண்ட்' அடிக்கடி கெட்டுப்போய் விடுவதால் பாலும் அடிக்கடி கெட்டுப்போய் விடுகிறது என்ற புகார்கள் வருகின்றன. அதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படு கிறது. அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போடவும்.

திரு. எம். ஏ. லத்தீப் : துணைத் தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் எனது தொகுதியிலுள்ள ஆலங்காயம் பகுதிக்கு அருகாமையில் உள்ள ஜவ்வாது மலையோரத்தில் மாட்டுப் பண்ணை ஆரம்பிப்பதற்கு அனுகூலமான சூழ்நிலையிலிருக்கிறது என்று மதிப்பிட்டுக் குழு பரிந்துரை வழங்கியிருக்கிறது. அந்தப் பரிந்துரை மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பால் துறையைப் பற்றிய பதில் தான் என்னிடத்தில் இருக்கிறது. கால் நடை வளர்ச்சி பற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று நமது நாட்டு மக்களுக்கு சுக வாழ்வு அளிப்பதற்காக பால் கொடுக்கும் கால் நடைகளை பெருமளவில் வளர்க்கும் திட்டத்தில் நாம் ஈடுபட்டிருக்கும் இந்த நேரத்தில், ஆயிரக்கணக்கான கால் நடைகள் கேரளா போன்ற பகுதிகளுக்கு அடித்துச் சாப்பிடுவதற்காக அனுப்பி விடுகிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, கேரளாவிற்கு அனுப்பப்படுகிற கால்நடைகள் பால் கொடுக்கிற கால்நடைகள் அல்ல. இங்கே பிரயோசனப்படாத மாடுகளைத்தான் அனுப்புகிறோம். அப்படி அனுப்புகிற காரணத்தால் நமக்கு லாபம் கிடைக்கிறதே தவிர நஷ்டமாவது இல்லை.

திரு. கே. ஏ. வகாப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பால் வழங்கும் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் பால் அதிகமாக கிடைப்பதற்கு வாய்ப்பு செய்யப்பட்டிருக்கிறதா? கிராமப்புறங்களில் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிப்பதற்கு பொருளாதார உதவி செய்து விவசாயிகளும் அதிலே ஈடுபட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? மேலும், வேறு ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, கிராமப்புறங்களில் இருக்கும் மக்களுக்கு தாராளமாக கடன் வசதி கிடைக்கும் வகையில் தமிழ் நாட்டில் மொத்தம் 2,500 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து இருக்கிறோம். இருந்தாலும் இன்னும் அதிகப்படியான மக்களுக்கு உதவி செய்யும் வகையில், அந்தச் சங்கங்களை எல்லாம் எப்படியெப்படி லாபம் தரும் வகையில் மாற்றியமைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். மேலும், விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்கும் அரசாங்கம் இப்போது வழி வகுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. இ. ராமசாமி: தலைவரவர்களே, வால்பாறையில் ஒரு பால் வழங்கும் சங்கம் நடந்து கொண்டிருந்தது. அந்தச் சங்கத்திற்கு அரசாங்கம் மானியமாகவும், கடனாகவும் பணம் கொடுத்தது. கொஞ்ச காலமாக அந்தப் பண்ணை இயங்கவில்லை. அதை இயங்கச் செய்ய அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அந்தப் பண்ணை நிர்வாகத்தில் ஏற்பட்ட சில தவறுகளின் காரணத்தால் அது இயங்குவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அது சரியாக்கப்பட்ட பிறகு தொடர்ந்து இயங்கும்.

1972 டிசம்பர் 4]

திரு. க. நாகராஜன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற போது தமிழ் நாட்டிலிருந்து கேரளாவிற்கு மாடுகள் அனுப்பப்படுவதாகக் கூறினார்கள். கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு ஏதாவது கிழட்டு மாடுகள் வந்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கேரளாவிலிருந்து மாடுகள் வரவில்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவரவர்களே, ஹரிஜனங்களுக்கு என்று பால் பண்ணை ஆரம்பித்துக் கொடுக்க அரசாங்கம் ஏதேனும் திட்டம் வகுத்துள்ளதா ? ஒரு ஊரில் ஒரு மில்க் சொசைடி இருக்கிறபோது, அந்த ஊரில் ஹரிஜனங்களுக்கு என்று தனியாக ஒரு சொசைடி ஆரம்பிக்க முடியாதபடி விதியிருக்கிறது. அந்த விதியைத் தளர்த்தி, ஏற்கெனவே ஒரு ஊரில் பொது மக்களுக்காக சொசைடி இருந்தாலும், அந்த ஊரில் மற்றொரு சொசைடி ஹரிஜனங்களுக்காக அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பொதுமக்களுக்காக இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களிலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களை உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்வதற்கு சலுகை தருகிறோம். தனியாக ஹரிஜனங்கள் வாழ்கின்ற பகுதியில் இப்படிப்பட்ட சங்கங்கள் அமைப்பதற்கும் அரசாங்கம் அனுமதி வழங்குகிறது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, கூட்டுறவுப் பால் பண்ணைச் சங்கங்கள் கிராமப்புறங்களில் இயங்குவது சற்று கடினமாக இருக்கிறது. அதற்காக அரசாங்கம் மானியம் ஏதேனும் வழங்கும் திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. சோ. கருணைநாதன் : தலைவரவர்களே, இப்போது அதிகமாக பால் தரக்கூடிய நல்ல பசுக்கள் மேல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட அதிகமாக பால் தரக்கூடிய பசுக்கள் ஏற்கெனவே இறக்குமதி செய்யப்பட்டு, அவைகளின் மூலமாக பால் உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டு வருகிறோம்.

திரு. டி. வி. சம்பத் : துணைத் தலைவரவர்களே, சீர்காழி வட்டத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு என பால் வழங்கு திட்டம் ஆரம்பிக்க தமிழக அரசு ஏறத்தாழ ரூ. 50,000 வழங்கியும், அந்தக் கூட்டுறவுச் சங்கம் இயங்காமல் தற்போது இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போடவும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அந்த சீர்காழி கூட்டுறவுப் பால் பண்ணைக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தை மேற்கொண்டு நடத்துபவர் முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர், அவர் சரியாக நிர்வகிக்கவில்லை என்று அதிகமான புகார்கள் வருகின்றன, அப்படிப்பட்ட புகார்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

கறவை மாடுகள் வாங்குவதற்குக் கடன் வசதி

*40. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்தின் மூலம் கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் பெற்றவர்கள் முறையாக அத்தொகையைப் பயன்படுத்துவது எவ்வாறு கண்காணிக்கப்பட்டு வருகிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கூட்டுறவுப் பால் வழங்கு சங்கங்கள் அனைத்துக்கும் பொருந்துகின்ற விதிகளின்படி கடன் தொகைகள் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்துக்குள் கறவை மாடுகள் வாங்கப்பட வேண்டும். உறுப்பினர்கள் தகுதியான காரணங்களைக் காட்டினால், இக்காலக் கெடுவை மூன்று மாதங்கள் வரை நீட்டிக்க பால் உற்பத்தி—பால்பண்ணை வளர்ச்சித் துறை ஆணையாளருக்கு அல்லது பால்பண்ணை துணைப்பதிவாளருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடன் வாங்கியவர் வரையறுக்கப்பட்ட காலத்துக்குள் கறவை மாடுகளை வாங்கத் தவறினால் அக்கடன் உரிய காலத்துக்கு முன்னரே முடிக்கப்பட்டு கடன் தொகை முழுவதையும் வசூல் செய்ய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், விதிகளிலுள்ள விதித்துறைகளின்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திருப்பூர் கூட்டுறவுப் பால் வழங்கு சங்கத்தில் கறவை மாடுகள் வாங்குவதற்காக கடன் பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் கறவை மாடுகளை வாங்கினார்கள். இவ்வாறாக எக்காரியத்துக்காக கடன் கொடுக்கப்பட்டதோ அக்காரியத்துக்காக அக்கடன் தொகை பயன்படுத்தப்பட்டது எனினும், கடன் பெற்றவர்களில் சிலர் விதிகளில் சொல்லியுள்ளவாறு சில காலத்துக்கு சங்கத்துக்கு பால் வழங்கவில்லை. அவர்களிடமிருந்து கெடுவடைந்த பாக்கியை வசூலிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.